## தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை 600 025.
## சுற்றறிக்கை எண். 51843/கே1/2021, நாள். 1. 03. 2022

பொருள் பண்டகம் – தொழில் நுட்பக் கல்வித்துறை – – 51 அரசு / 34 அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 11 அரசு / 3 அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் – நவீன ஆய்வக உபகரணங்கள் / கணினிகள் மற்றும் கணினி சார்ந்த பொருட்கள் / அறைகலன்கள் கொள்முதல் – முதல்வரின் நிதி அதிகார உச்ச வரம்பினை உயர்த்தி வழங்குவது – தொடர்பாக.

பார்வை 1. அரசாணை (நிலை) எண்.166, உயர்கல்வி (சி2) துறை, நாள்.29.6.2017.
2.அரசாணை(நிலை) எண்.153, உயர்கல்வி (சி2) துறை, நாள்.20.6.2017.
3. இவ்வலுவலகக் கடித எண். 51843/கே1/2021, நாள்.7.12.2021, 19.1.2022 மற்றும் 25.1.2022.

----

பார்வை 1–ல் காணும் அரசாணையில், இத்தொழில் நுட்பக் கல்வித்துறை கீழ் இயங்கும் அரசு / அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்களுக்கு, சம்பந்தப்பட்ட பயிலக மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் பண்டகங்களை கொள்முதல் விதிமுறைகளுக்கு உட்பட்டு வாங்க பின்வருமாறு நிதி உச்சவரம்பினை உயர்த்தி ஆணை வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| அரசினர் பொறியியல் கல்லூரி முதல்வர்களுக்கான நிதி உச்ச வரம்பு | .. | ரூ.4,00,000/– |
| அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்கள் | .. | ரூ.2,00,000/– |
| அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் | .. | ரூ.1,00,000/– |

மேற்காணும் அரசாணை 2017–ல் பிறப்பிக்கப்பட்டு சுமார் 5 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், உபகரணங்கள்/அறைகலன்கள் விலை உயர்ந்துள்ளதால் முதல்வர்களின் கொள்முதல் நிதி உச்ச வரம்பினை உயர்த்தி வழங்குமாறு முதல்வர்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு வந்தன. வளர்ந்து வரும் தொழில் நுட்ப வளர்ச்சிகளுக்கு ஏற்ப பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான உள்கட்டமைப்பு, ஆய்வக மேம்பாடு ஆகியவற்றின் தரம் உயர்த்த, நிலை உயர்த்தவும் உரிய இயந்திரங்கள்/உபகரணங்கள் கொள்முதல் செய்ய அவசியமாகிறது.

இந்நிலையில் மேற்காணும் கொள்முதல்களை மேற்கொள்ள அனுமதியும் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடும் அரசிடமிருந்து பெறப்பட்ட பின்னர், கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, முதல்வரின் நிதி அதிகாரத்திற்கு மேற்பட்ட இனங்களுக்கு தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் அனுமதி கோரி கருத்துருக்கள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்ட பின்னர் குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு வழங்கலாணை அனுப்பி, பொருட்கள் பெறப்பட்டு, இயங்கும் நிலைக்கு கொண்டுவரப்பட்டபின்னரே கொள்முதல் தொகை ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு போதுமான கால அவகாசம்

தேவைப்படுவதால் உரிய காலக்கெடுவுக்குள் கொள்முதல் செய்ய இயலாத நிலையில், அரசிடமிருந்து மாணவர்களின் நலன் கருதி பெறப்படும் நிதி ஒதுக்கீடு அரசுக்கு சரண் செய்ய நேரிடுகிறது.

எனவே, முதல்வர்களுக்கான நிதி உச்ச வரம்பினை பின்வருமாறு உயர்த்தி அனுமதி வழங்குமாறு பார்வை 3–ல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

| வ. எண். | பயிலகங்கள் | தற்போதைய நிதி உச்ச வரம்பு ரூ. | உயர்த்தி வழங்கக் கோரும் நிதி அளவின் உச்ச வரம்பு ரூ. |
|---|---|---|---|
| 1. | அரசினர் பொறியியல் கல்லூரி முதல்வர்களுக்கான நிதி உச்ச வரம்பு | ரூ.4,00,000/– | ரூ. 10,00,000/– |
| 2. | அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்கள் | ரூ.2,00,000/– | ரூ. 5,00,000/– |
| 3. | அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும்பாலிடெக்னிக் கல்லூரிகள் | ரூ.1,00,000/– | ரூ. 2,00,000/– |

இப்பொருள் தொடர்பாக அரசிடமிருந்து அனுமதி ஆணை எதிர்நோக்கப்படும் நிலையில், 2021–2022 நிதியாண்டு முடிவுறும் தருவாயில் உள்ளதாலும், மாணவர்களின் நலன் கருதி அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி அரசுக்கு சரண் செய்வதைத் தவிர்க்கும் பொருட்டும், அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் / பாலிடெக்னிக் கல்லூரி **முதல்வர்களின் நிதி உச்ச வரம்பினை பின்வருமாறு உயர்த்தி வழங்கி இதன் மூலம் ஆணை வழங்கப்படுவதுடன்** பார்வை 2–ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள பராமரிப்பு பணிகளுக்கான நிதி உச்ச வரம்பில் மாற்றம் ஏதும் இல்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ. எண். | பயிலகங்கள் | தற்போதைய நிதி உச்ச வரம்பு ரூ. | தற்போது உயர்த்தி வழங்கும் நிதி அளவின் உச்ச வரம்பு ரூ. |
|---|---|---|---|
| 1. | அரசினர் பொறியியல் கல்லூரி முதல்வர்களுக்கான நிதி உச்ச வரம்பு | ரூ.4,00,000/– | ரூ. 10,00,000/– |
| 2. | அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலகங்களின் முதல்வர்கள் | ரூ.2,00,000/– | ரூ. 5,00,000/– |
| 3. | அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் | ரூ.1,00,000/– | ரூ. 2,00,000/– |

அரசு நிதியுதவி பெறும் பொறியியல் / பாலிடெக்னிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை, கொள்முதலுக்கென அரசிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் நிதி ஏதும் வழங்கப்படுவது இல்லை, பராமரிப்பு பணிகளுக்கு மட்டுமே அரசிடமிருந்து நிதி வழங்கப்பட்டு வருகிறது. எனவே **மேற்காணும் கொள்முதலுக்கான நிதி உச்ச வரம்பு மற்றும் பார்வை 2–ல் காணும் அரசாணையில் பராமரிப்பு பணிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிதி உச்ச வரம்பு, அரசு நிதியுதவி பெறும் பொறியியல் / பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர்களைப் பொறுத்தவரை அரசிடமிருந்து நிதி பெறப்பட்டு மேற்கொள்ளப்படும் இனங்களுக்கு மட்டுமே பொருந்தும்** எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஒம்./–க.லட்சுமி பிரியா,
**தொழில் நுட்பக் கல்வி ஆணையர்.**

பெறுநர்
முதல்வர் / முதல்வர் (பொ),
அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல்
மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள்.

நகல்
1)ஆணையரின் மேஜைக்கு
2)கூடுதல் இயக்குநர் (பாலி)
3) கூடுதல் இயக்குநர் (தேர்வு)
4)நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்
5)உதவி இயக்குநர் (திட்டம்)
6)இயக்குநரின் நேர்முக உதவியாளர்
7)தொழில் நுட்ப உதவியாளர் (மதிப்பீடு 2)
8)கண்காணிப்பாளர் – கே பிரிவு, எக்ஸ் பிரிவு,
9) கே2, கே3, கே4 இருக்கைகள்
10)இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி *அனுப்பலாகிறது* //

கி. தங்கலக்ஷ்மி 2/3/22
*கண்காணிப்பாளர்*

2/3/22